# நாம் வணங்கும் தெய்வம்

**PV. JESUDAS**

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! தேவனுடைய கிருபை உங்களுக்கு பெருக்கமாக இருப்பதாக. கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் மழைப்போல உங்கள் மீது பொழிவதாக !

ஒரு சிறுவன் அநேக விளையாட்டுகளை வைத்து கொண்டு விளையாடி கொண்டிருந்தான்.அப்படி அவன் ஆர்வமாக விளையாடிக் கொண்டிருக்கையில் திடிரென்று அந்த அறையின் ஓரத்திலே ஒரு சிறிய எலி ஒன்றை அவன் கவனித்து, அப்படியே அதனை பார்த்துக்கொண்டிருந்தான். அந்த எலி துள்ளி குதித்து ஓடுவதை பார்த்து, உயிரற்ற விளையாட்டுகளைவிட உயிருள்ள அந்த எலி விளையாடுவதை பார்த்துக் கொண்டிருந்தான்.

அதனை ரசித்துகொண்டிருந்த அவனது கண்கள் இன்னும் பெரிதாக விரிந்தன. ஏனென்றால் அந்த எலிக்கு பின்னாக ஒரு பூனை மெல்ல அந்த எலியை நோக்கி நகர்ந்து வந்து கொண்டி ருந்தது. அந்த சிறுவனுக்கு இன்னும் மகிழ்ச்சியாக இருந்தது. அப்பொழுது அந்த பூனை திடிரென்று அந்த எலி மீது பாய்ந்தது. அந்த எலி வேகமாய் ஓடிற்று. அந்த பூனையும் வேகமாக பின் தொடர்ந்தது. அங்குமிங்குமாக இரண்டும் ஓடினது, அந்த பூனை சமயம் பார்த்து அந்த எலியின் மீது பாய்ந்து வாயிலே கவ்வி கொண்டது. அந்த சிறுவனுக்கு கவலை வந்துவிட்டது.

அந்த பூனை அந்த எலியை திரும்ப தன் வாயிலிருந்து விட்டு, திரும்ப அதனை துரத்த ஆரம்பித்தது. இன்னும் சில நிமிடங்கள் இரண்டும் ஓடினது, திரும்பவும் அந்த பூனை அந்த எலியை கவ்விகொண்டது.



அந்த சிறுவனுக்கு இந்த காரியம் ஆச்சரியமாக இருந்தது, அதிக சந்தோஷப்பட்டான். சிறிது நேரம் கழித்து அந்த பூனை கடைசியாக அந்த எலியை கொன்று புசித்துவிட்டது.

அந்த சிறுவனுக்கு அதிக விசனமாக போய்விட்டது, அப்படியே உட்கார்ந்துவிட்டான். அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை! பிறகு அவனது தாயார் அவனை அழைத்து வந்து சாப்பிட உட்கார வைத்தபோதும், அவனுக்கு சாப்பிடுவதற்கு மனமில்லை. அவனது தகப்பனார் அவனை நோக்கி : தம்பி நீ ஏன் கவலையாக இருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன்: அப்பா இந்த உலகத்தில் இருக்கிற எல்லாவற்றையும் கடவுள்தான் உண்டாக்கினாரா? என்று கேட்டான். அதற்கு அந்த தகப்பன்: ஆம் மகனே! கடவுள் தான் உண்டாக்கினார் என்றார். அதற்கு அந்த மகன் எலியை உண்டாக்கின கடவுள் பூனையை ஏன் உண்டாக்கினார்? என்று கேட்டான்.

இன்றைக்கு கடவுளைப் பற்றின ஒரு தப்பிதமான அபிப்பிராயம் நம்மிடத்திலே உலாவுகிறது. கடவுளே இல்லை என்று சொல்லுகிற அளவிற்கு இந்த உலகம் இருக்கிறது. இந்த உலகத்தில் துன்பங்களும், துயரங்களும், கஷ்டங்களும், ஏராளமாக பெருகிகொண்டே போகிறதே, இந்த சூழ்நிலையில் கடவுள் என்று ஒருவர் உண்டா? அவர் அன்பு தெய்வம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அது எப்படி?

ஐரோப்பா நாடுகளில், கடவுள் இருந்தாரென்றால் நமக்கு ஏன் துன்பங்கள் வருகிறது என்ற கேள்வி மிக அதிகமாக கேட்கப்படுகிறது. ஒருவர் சொன்னார்: கடல்கறை மணலை பார்க்கிலும் பாரமான துன்பங்கள் மனித வாழ்வை கசப்பாக்கின்றன. ஆகவே யோபு என்ற பக்தன் இந்த துன்பங்களின் மத்தியிலே சிக்கிக்கொண்டவனாக இருந்தான்

**“நான் பிறந்தநாளும் ஒரு ஆண்பிள்ளை உற்பத்தியாயிற்றென்று சொல்லப்பட்ட ராத்திரியும் அழிவதாக. ~ யோபு 3:3.”**

அப்படியானால் இன்றைக்கு மரணமும், துன்பமும், நோயும், பயமும், திகிலும் கல்லும், முள்ளும், பஞ்சமும், கொள்ளை நோய்களும் மக்களை குழப்பி கொண்டேயிருக்கிறது.

அன்றைக்கு ஆண்டவர் ஆதாமை தேடி ஏதேன் தோட்டத் திலே வந்து ஆதாமே நீ எங்கேயிருக்கிறாய்? என்று கேட்டார். ஏன்? ஆதாம் பாவம் செய்ததினாலே.

இன்று நாம் கடவுளை பார்த்து, கடவுளே நீ எங்கேயிருக்கிறாய் என்கிறோம். இந்த விதமான கேள்விகளுக்கு ஆண்டவர் என்ன சொல்கிறார்?

**“நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள் ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். ~சங்கீதம் 46:10.”**

மனிதர்கள் உள்ளத்திலே எதையாவது வணங்கவேண்டும் என்ற ஒரு ஆசையிருக்கிறது. அது நமது உள்ளத்தின் ஆழத்திலே இருக்கிறது. மனிதன் மட்டும் யாரையாவது வணங்கவேண்டும் என்ற ஒரு விருப்பத்தோடுதான் உண்டாக்கப்பட்டிருக்கிறான், அப்படியானால் நாம் யாரை வணங்கவேண்டும்? எதை வேண்டுமானாலும் வணங்கிவிடலாமா?

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! நாம் வணங்கும் காரியத்தை குறித்து அக்கரையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒரு முனிவர்: “கண்ட கோவில் தெய்வமென்று கையெடுப் பதில்லையே” என்று பாடினார். அதற்கு எல்லாவற்றையும் கையெடுத்து தொழுதுகொள்வதா? என்று கேட்கிறார்.

ஒரு பெட்டிஷன் கொடுக்க கலெக்டர் அலுவலகத்துக்கு போகவேண்டுமென்றால், அந்த அலுவலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் கலெக்டர்களா? இல்லை! அப்படியானால் அங்கு கலெக்டர் அலுவலகம் எங்கேயிருக்கிறது என்று விசாரிக்கிறோம். அந்த கலெக்டர் அலுவலகத்தில் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அங்கு பேசிக் கொண்டிருக்கிறவர்கள் அனைவரும் கலெக்டரா? இல்லை! அதில் யார் கலெக்டர் என்று விசாரிக்கிறோம்.

அப்படி யார் கலெக்டர் என்று விசாரித்தபிறகுதான் அவரை நெருங்கி வணங்கி நமது விண்ணப்பத்தை கையிலே கொடுக்கிறோம். இந்த உலகத்தில் நாம் எல்லோரிடமும் கைகூப்பி வணங்குவதில்லை! முதலாவது அவர் யார்? தெரிந்தவரா? என்று அறிந்தபிறகுதான் அவரை வணங்குகிறோம். இது நமது உலக வழக்கங்கள். இப்படியிருக்கும்போது வணக்கத்திற்குறியவராகவும், பரலோகத்தை கொடுக்ககூடியவராகவும், நித்திய ஜீவனை கொடுக்க கூடியவராகவும் இருக்கிற அந்த ஆண்டவரை பற்றி நாம் அறிந்துகொள்வது அவசியம்.

எதை வேண்டுமானாலும் தொழுதுகொள்ளலாம் என்ற காரியம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. இன்றைக்கு உலக மக்கள் படித்தவர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் இருக்கிறார்கள், அவர்களும் எதை வேண்டுமானாலும் வணங்கலாம் என்று



சொல்லும்போது அது எவ்வளவு பெரிய தப்பு என்று அவர்களுக்கு புரிவதில்லை. ஆராய்ச்சி மனப்பான்மை மனிதனுக்கு எல்லா கோனத்திலுமிருக்கிறது. ஆராய்ச்சி இல்லாமல் மனிதன் ஒன்றுமே செய்கிறதில்லை.

பிள்ளைகளை பள்ளியில் சேர்ப்பதற்கு முன் எந்த பள்ளியில் படித்தால் அவர்கள் நன்றாக படிக்ககூடுமென்று நல்ல பேர் எடுத்த பள்ளியை தேடி அதில் நம் பிள்ளைகளை சேர்ப்போம். இன்றைக்கு மனிதன் ஆராய்ந்து பாராமல் எதையும் செய்துவிடுகிறான் என்று சொன்னால் அது மிகையாகாது. அதே போல இன்று மார்க்கம், வணக்கம், தொழுகை, என்று வரும்போது இந்த ஆராய்ச்சி மனப்பான்மை சிறிதுகூட நமக்கு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. நாம் தொழுதுகொள்கிற கடவுள் ஒரு தெய்வம் தானா? நாம் இருக்கிற மார்க்கம் உண்மையான மார்க்கம்தானா? இந்த மார்க்கத்திலே இருந்து இந்த கடவுளை தொழுது கொண்டால் பரலோகத்திற்கு போகமுடியுமா? நித்திய ஜீவனை யடைய முடியுமா? பரிசுத்தம் பெறமுடியுமா? என்று நாம் யாரும் சிந்திக்கிறதில்லை! அதை பற்றி கேட்பதுமில்லை! பரலோகத்திற்கு போகவேண்டும் என்ற ஆசை ஏராளமான விசவாசிகளுக்கு இருக்கிறது. ஒவ்வொரு மார்க்கத்திற்கும் ஒவ்வொரு பரலோகம் இல்லை! ஒரே கடவுள், ஒரே பரலோகம்தான். நாம் இருக்கிற மார்க்கம், வணங்குகிற தெய்வம், இருக்கிற திருச்சபை, இவைகள் நம்மை பரலோகத்திற்கு கொண்டுபோகுமா? என்ற ஒரு ஆராய்ச்சியோ கேள்வியோ நம்மிடத்தில் இல்லை.

ஏதோ தாய் தந்தை அந்த மார்க்கத்திலே இருந்தார்கள், நாமும் அதன் வழியிலே தொடருகிறோம். நம்முடைய முன்னோர்கள் என்ன செய்தார்களோ அப்படியே நாமும் பின்பற்று கிறோம். அப்படியானால் முன்னோர்கள் தப்பிதமாக தெரிந்து கொண்டார்களா? என்ற ஒரு கேள்வி நமக்கு வருகிறது. நமது முன்னோர்கள் வாழ்ந்த பிரகாரம் நாம் வாழ்கிறோமா? சாப்பிடு கிறோமா? உடுத்துகிறோமா? இன்றைக்கு எல்லாவற்றிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

முன்னோர்கள் என்ன செய்தார்கள் என்று நாம் கவலைப்படுகிறதில்லை, நாமும் வேறுவிதமாகதான் செய்து கொண்டிருக்கிறோம். என்னுடைய முன்னோர்கள் கட்டை வண்டியிலேதான் போனார்கள், நானும் அப்படியேதான் போவேன் என்று யாரும் போகிறதில்லை.

என்னுடைய முன்னோர்கள் பக்கத்து கிராமங்களுக்கு நடந்தேதான் செல்வார்கள், நானும் அப்படியே நடந்தே செல்வேன் என்று நாம் அடம்பிடிக்கிறதில்லை.

ஆகவே நமக்கு இக்காலத்தில் பல வசதிகள் வந்தபிறகு நாமும் இக்காலத்திற்கேற்ப மாற்றிகொள்கிறோம், நம் முன்னோர் களின் காரியங்களிலிருந்து எல்லாவற்றிலும் நாம் மாறுப்பட்டிருக் கிறோம். அவர்களை போல இன்று நாம் உடுத்துவதில்லை சாப்பிடுகிறதில்லை பேசுகிறதில்லை. இப்படியிருக்க, மார்க்கத்தில் மாத்திரம் நாம் அவர்களது வழியை தொடருகிறோம். அன்று அவர்கள் அறியாது செய்திருப்பார்கள், இன்று நமக்கு வேண்டிய எல்லா விஞ்ஞானமும் சாட்சியோடு எடுத்து சொல்லுகிறது! இப்பொழுதுள்ள சூழ்நிலைகள் வேதத்திற்கேற்ப நடந்து கொண்டிருக்கிறது.

கடைசிக்காலத்தில் சூரியனின் வெப்பம் நம்மால் தாங்கமுடியாதென்று வேதம் சொல்லுகிறது அதனால் வெப்பம் தாங்கமுடியாமல் பலர் மரணமடைவார்கள். உலக முழவதும் வெய்யில் காலத்தில் வெப்பம் அதிகரித்து கொண்டேபோகிறது. இதையறிந்துகூட நாம் நம் முன்னோர்களின் வழிகளிலேதான் நடப்போம் என்றிருக்கிறோம்.

இன்றைக்கு மார்க்கத்திலே ஏராளமான வேதபுத்தகங்கள் இருக்கிறது. இந்து மார்க்கத்திலே 4 வேதபுத்தகம் இருக்கிறது, முஸ்லீம் மார்க்கத்திலே குரான் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு மார்க்கத்திலும் வேதங்கள் இருக்கையிலே, அவரவர்கள் தங்கள் பாரம்பரியங்களை பின்பற்றிதான் செயல்படுகிறார்கள் தவிர தங்கள் வேதங்களை பின்பற்றுவதில்லை என்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே எந்த மார்க்கத்தையும் நாம் தொழுது கொள்ளலாம் என்று நாம் நம்பிகொண்டிருக்கிறோம். எது உண்மையான மார்க்கம் எது உண்மையான சத்தியம் என்பதை நாம் உணராமல் இருக்கிறோம். பரலோகம் ஒன்று தான், நாம் வணங்குகிற தெய்வமும் ஒன்றுதான், நாம் படிக்கிற வேதமும் ஒன்றுதான், இப்படியாக நாம் ஒரே நோக்கத்துடன் வணங்கி கொண்டு பல பிரிவுகளாக பிரிந்திருக்கிறோமே இது சரிதானா? இந்த பிரிவுகள் நம்மை தேவனுடைய ராஜியத்திற்கு கொண்டு போகுமா? நாம் தொழுகிற அந்த ஆண்டவர் எப்படிப்பட்டவர்? என்பதை நாம் அறிந்து, தெரிந்து, தொழவேண்டும் என்ற சிந்தனைகளை நான் உங்கள் மத்தியிலே வைக்க விரும்புகிறேன்.



உண்மையான கடவுள் யார் என்று ஆண்டவர் தெளிவாக சொல்லவும் ஆயத்தமாயிருக்கிறார்.

**“உங்கள் முழு இருதயத்தோடு என்னை தேடினீர்களானால் என்னை தேடுகையில் கண்டுப்பிடிப்பீர்கள்”**
**–எரேமியா 29. 13**

முழு இருதயத்தோடு ஆண்டவர் யார் என்று நாம் தேடுவோமானால் நிச்சயமாக அவர் நமக்கு தெளிவுப்படுத்தி காட்டுவார். மேலே குறிப்பிட்ட வசனம் எரேமியா தீர்க்கதரிசி மூலமாக ஆண்டவர் உறைத்த வாக்குதத்தம்.

ஒரு சன்னியாசியினிடத்தில் ஒரு வாலிபன் போய்: ஐயா! நான் கடவுளை பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன், எனக்கு அந்த கடவுளை பார்ப்பதற்கு வழிகாட்டவேண்டும் என்று கேட்டான். அந்த பக்கம் ஒரு ஆறு இருந்தது, அந்த ஆற்றுகுள்ளாக அந்த வாலிபனை அழைத்துகொண்டுபோய், கழுத்தளவு ஆழத்திற்கு போனபிறகு அந்த சன்னியாசி அவனை திடிரென்று தண்ணீருக்குள்ளாக அமுக்கிவிட்டார். அவன் தினறும்போது அவனது தலையை வெளியே கொண்டுவந்தார். அப்பொழுது அந்த வாலிபன்: ஐயா! என்னை கொன்றுபோடவா முயன்றீர்கள்? என்று கேட்டதற்கு அந்த பெரியவர்: உன்னை கொன்றுபோட நான் விரும்பவில்லை, மாறாக நீ தண்ணீரு குள்ளாக அமுங்கினபோது மூச்சு விடவேண்டும் என்று எவ்வளவு ஆசைப்பட்டாய்! எப்படியாவது காற்றை சுவாசிக்கவேண்டும் என்று நீ ஆசைப்பட்டாயே! இதே மாதிரி முழு மூச்சோடு நீ ஆண்டவரை தேடினால் நீ கண்டுப்பிடிப்பாய் என்று சொன்னார்.
நாம் தண்ணீரில் தத்தளித்து கொண்டிருக்கும் பாவிகள், ஆண்டவர் வேண்டுமென்றால் தண்ணீரை விட்டு வெளியே வந்து பரிசுத்த ஆவியின் உதவியால் நாம் சுவாசித்தோமென்றால் அந்த ஆண்டவர் யார் என்பதை நமக்கு காட்டுவார்.
கர்த்தருக்குள் பிரியமானவர்களே! உண்மையான மார்க்கம், தெய்வம், விசுவாசம், எது என்பதை நாம் தேடவேண்டும். இந்த உலகத்திலே கடவுளை பற்றி அநேக காரியங்கள் சொல்லுகிறது. அவைகளில் சில முக்கிய காரியங்களை நாம் அறிந்துக் கொள்ளவேண்டும். கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்? என்று நாம் தெரிந்துகொண்டால் தொழுவுவதற்கும் வணங்குவதற்கும் உதவியாகயிருக்கும்.

இன்றைக்கு உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஆண்டவருடைய வல்லமையை பார்க்கிறோம்.

சூரியன் நம்முடைய உலகத்தை விட்டு ஒன்பது கோடி மைல் அந்த பக்கமாக இருந்தாலும், அதற்கு இருக்கும் இழுப்பு சக்தியினாலே நமது உலகத்தை அது சரியானபடி இழுத்து கொண்டு சுற்றுகிறது. இல்லாவிட்டால் நமது உலகம் எங்கேயாவது போய்விடும்.

ஒரு விஞ்ஞானி இந்த இழுப்பு சக்தியை பற்றின வல்லமையை குறித்து என்ன சொன்னாரென்றால்: 3 கோடி அறுபது லட்சம், லட்சம் லட்சம் லட்சம் டன் வல்லமையுள்ளது என்று சொன்னார். அப்படியானால் அது எவ்வளவு பெரிய வல்லமையென்று பாருங்கள்! அண்டசராசரங்களில் உருண் டோடுகிற ஏராளமான சூரியன்களும், நட்சத்திரங்களும், பிராமாண்ட மான உலகங்களும், யாவற்றையும் ஆண்டவர் படைத்தது மட்டுமல்லாமல், அவைகளை தன்தன் பாதைகளில் ஓடுவதற்கும், தன்னுடைய வேலைகளை செய்வதற்கும், ஆண்டவர் அப்படியாக அமைத்திருக்கிறார்.

அவருடைய வல்லமையை குறித்து எப்படி விவரிப்பது? இன்று மனிதன் ஒரு சில பவுண்ட் உள்ள கோலங்களை வானத்திற்கு 200 அல்லது 300 மைல் தூரம் அனுப்பிவிட்டு, ஆகா எவ்வளவு பெரிய ஞானம்! எவ்வளவு பெரிய அறிவு! எவ்வளவு பெரிய வல்லமை! என்று கைதட்டி ஆர்ப்பரிக்கின்றான். நமது சிந்தனைக்கும் எண்ணத்திற்கும் அப்பாற்பட்ட பிரமாண்டமான உலகங்களை இந்த வானமண்டலத்திலே ஆண்டவர் தொங்க வைத்திருக்கிறாரே! அவருடைய வல்லமையை என்னவென்று சொல்லுவது? அது எப்படிப்பட்டதாயிருக்கிறது? இதை நாம் அறிய கூடுமோ?

மழை சோவென்று பெய்தால் அதை மனிதனால் தாங்கிக்கொள்ளமுடிவதில்லை, ஓரமாய் ஒதுங்கி நிற்கிறான். இடி இடித்து மின்னல் மின்னினால், அதற்கு அவன் பார்க்ககூட திராணியற்றவனாக ஒதுங்கி நிற்கிறான். புயல்களும், வெள்ளங்களும் மனிதர்களை பயமுறுத்தத்தான் செய்கிறது. இப்படியாக இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும் பிராமாண்டமான வல்லமைகள் இருக்கிறது. இவைகள் ஆண்டவருடைய வல்லமையே தவிர வேறு தெய்வங்களின் வல்லமை கிடையாது! அவைகள் ஆண்டவருடைய வல்லமைகளாகும்! இன்றைக்கு மக்கள் ஆண்டவருடைய வல்லமைகளையும், சக்திகளையும் வணங்கு கிறார்கள். வல்லமையுள்ள கடவுளை வணங்குவதில்லை.



**ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது, பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது".**
–கொலோசேயர் 1.16

தேவனுடைய வல்லமைகளும் சக்திகளும் எல்லா காரியங் களையும் தன்னுடைய கரத்திலே பிடித்து இழுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த வல்லமையுள்ள கடவுள் நமக்காக எதை வேண்டுமானாலும் செய்வார். ஒரு தேவ பக்தியுள்ள மனுஷன் ஆண்டவரை நோக்கி: இதோ நாங்கள் யுத்தம் செய்கிறோம், எதிரிகளை ஜெயிக்கவேண்டும், இந்த சூரியனை நிற்க வைக்கும்படி கேட்டு கொள்கிறேன் என்று கேட்டு கொண்டான். அந்த சூரியன் ஏறகுறைய ஒரு நாள் முழவதும் அப்படியே நின்றது. விஞ்ஞானிகள் இதை படித்துவிட்டு ஆச்சரியப் படுகிறார்கள். ஏனென்றால் சூரியன் நிற்கவேண்டுமென்றால் அதை சுற்றி ஓடுகிற எல்லா கிரகங்களும் நிற்கவேண்டும். அப்படி நின்றால் மற்ற சூரியன்களிலும் அந்த அண்டசராசரங்களிலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். என்றாலும் ஒரு மனிதனுடைய சத்தத்தை கேட்டு இந்த அண்டசராசரங்களிலே நடக்கக்கூடாத, எண்ணிப்பார்க்கமுடியாத ஒரு காரியத்தை ஆண்டவர் செய்தார். அவர் நமக்காக எதையும் செய்ய ஆயத்தமுள்ளவராகவே இருக்கிறார். நாம் எதற்கும் பயப்பட தேவையில்லை! நாம் வணங்கும் தெய்வம் மகத்தான தெய்வம் ஆயிற்றே. அவர் வல்லமையான தெய்வம் ஆயிற்றே! அப்படியிருக்க நமக்கு எப்படி அவர் உதவி செய்யாமலிருப்பார்?

நான் கல்லூரியிலே படித்து கொண்டிருந்தபோது எனக்கு ஒரு தந்தி வந்தது. தாயார் அதிக வியாதியாயிருக்கிறார்கள், சீக்கிரமாக புறப்பட்டுவா என்று எழுதியிருந்தது. அப்பொழுது நான் பூனாவிலே படித்துக்கொண்டிருந்தேன். எனது ஊர் கோயமுத்தூர் பக்கத்திலே இருக்கிறது. நான் அதிகமாக என்னுடைய தாயை நேசித்த ஒரு மகன்! உடனே அவசரமாக புறப்பட்டு பிரயாணம் செய்தேன். அங்கு ஈரோடுக்கு வந்து கோவைக்கு சென்றேன். அங்கிருந்து எட்டுமைல் தூரத்திலே என்னுடைய வீடு இருக்கிறது, இரவு ஒரு மணி ஆகிவிட்டது என்ன செய்வது என்றே தெரியவில்லை! அந்நேரத்திலே எந்தவிதமான வாகனமும் கிடையாது, ஆனால் அங்கு ஒரு சைக்கிள் கடை இருந்தது.

அந்த இரவிலே அந்த கடை கதவை தட்டினேன், கடைக்காரர் கோபத்தோடு எழுந்தார். காரணத்தை சொல்லி கரங்களை பிடித்து கெஞ்சி அழுதேன். அவர் என் மீது இரக்கப்பட்டு ஒரு சைக்கிளை எடுத்துக்கொடுத்து, உன்னை நான் நம்புகிறேன் சைக்கிளை திரும்ப வந்து கொடுத்துவிடு என்று சொன்னார். அன்று ஒரே காற்று கலந்த மழையாக இருந்தது. என்னுடைய ஊருக்கு போகவேண்டுமென்றால் ஏற்று பாதையிலே போகவேண்டும். அன்று நான் சாப்பிடவில்லை, ஒன்றரை நாள் பிரயாணத்தினால் ரொம்பவும் களைப்பாக இருந்தேன்.

என்னால் அந்த காற்றினால் சைக்கிளை மிதிக்ககூட முடியவில்லை! மழையும் கொட்டுகிறது, என்ன செய்வது? அந்த நடு ரோட்டிலே அப்படியே சைக்கிளை நிறுத்தி வைத்து முழங்காற்படியிட்டு ஜெபித்தேன். தகப்பனே! சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே! என்னுடைய தாயை பார்ப்பதற்கு எனக்கு ஒத்தாசை செய்யவேண்டும், எனக்கு உதவி செய்யும் என்று ஜெபத்தை முடித்து விட்டு எழுந்து சைக்கிளை மிதித்தேன். அரை மணி நேரத்திலே என்னுடைய வீட்டிலே இருந்தேன். கதவை திறந்து, அம்மா என்று கூப்பிட்டு கொண்டே நுழைந்தேன். அப்பொழுது அவர்கள் வியாதி சுகமாகிவிட்டது! கர்த்தர் நமக்காக எல்லாவற்றையும் செய்வார், எனக்கு பல ஆச்சரியமான காரியங்கள் நடந்திருக்கிறது. கர்த்தர் என் ஜெபத்தை அதிகமாக கேட்டு நன்மைகள் செய்திருக்கிறார். அவரை நாம் அதிகமாய் நேசித்தோமென்றால் நமக்காக அவர் எதையும் செய்வார். அவரது கரங்கள் சோர்ந்து போகிறதில்லை, ஏனென்றால் அவர் சர்வவல்லமையுள்ள தேவன். அவருடைய நாமத்தை நாம் ஸ்தோத்தரிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏதோ ஒன்றை நாம் வணங்கவேண்டியதில்லை! அண்டசரா சரங்களை ஆண்டு நடத்துகிற ஒரு தேவன்தான் தெய்வமாக இருக்கமுடியுமே தவிர, எது வேண்டுமென்றாலும் தெய்வமாக இருக்கமுடியாது என்று நாம் அறிந்துக்கொள்ளவேண்டும். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அந்த பெண்தான் நம் தாயாக இருக்கமுடியுமே தவிர வேறு எந்த பெண்ணும் நம் தாயாக இருக்கமுடியாது. அண்டசராசரங்களையும், நம்மையும், இந்த உலகத்தையும் உருவாக்கின அந்த தெய்வம்தான் உண்மையான தெய்வமாக இருக்கமுடியுமே தவிர எதை வேண்டுமென்றாலும் தெய்வமாக நாம் வணங்கமுடியாது.



**"வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்" ~எரேமியா 10:11**

ஆகவே எதை பற்றியும் கவலைப்படாமல் நமக்காக இருக்கிற ஒரே தெய்வத்தை நாம் வணங்கவும் விண்ணப்பிக்கவும் வேண்டும். இந்த உலகத்திலே நாம் எத்தனை நாட்கள் வாழமுடியும்? வாழ்கிற இந்த கொஞ்ச நாட்களிலே பாவங்களுக்கு நாம் அடிமையாகாமல், தேவனுக்கு அடிமையாகி வாழவேண்டும். அந்த ஒரு தெய்வத்திற்கு நாம் கட்டுபட்டு, நம்முடைய தலைகளை அவர் முன் தாழ்த்தவேண்டும். உலகம் உண்டானது முதற்கொண்டு இந்த பாவ உலகத்திலே பிறந்து, பாவ உலகத்திலே அடிமையாகி தத்தலித்து கொண்டு வாழ்கிற நமக்கு, விடுதலை கொடுக்க ஒரு தெய்வமே மனிதனாய் வந்து பிறந்தார். அவரை பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

**"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" ~லூக்கா 19:10 .**

**"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது, அவர்களில் பிரதான பாவி நான் " 1 தீமோத்தேயு 1:15**

**"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்ற பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" ~மத்தேயு 1:21**

எவ்வளவுதான் நாம் பாவிகளாயிருந்தாலும், ஆண்டவர் தமது குமாரனை நமக்காக அனுப்பி, நம்மை அப்படியே விட்டுவிடாமல், நாமும் அவரோடு பரலோகத்தில் சந்தோஷப்பட வழிகளை வகுத்தார். இதற்காக தமது ஒரே பேரான குமாரனை பலி கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார். அதோ அந்த இயேசுவை நோக்கி பாருங்கள்! நமக்காக நண்மைகளையே செய்துவந்தார். அவரை நாம் என்ன செய்தோம்? கடைசியாக அவரை துன்பப்படுத்தி அவரை சிலுவையில் அரைந்து மரணத்தை பார்க்காத அவரை மரணத்திற்க்குள்ளாக்கினோம். இன்றும் உயிர்த்தெழுந்த அதே இயேசு கிறிஸ்து, இந்த உலகத்திலிருக்கும் அத்தனை பாவிகளையும் இரட்சிக்க அழைத்து கொண்டுதான் இருக்கிறார்.

**"பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி"_ ~சங்கீதம் 40:2**

பயங்கரமான பாவகுழியிலே நாம் விழுந்து கிடக்கிறோம். அந்த பாவகுழியிலிருந்து யாரும் நம்மை எடுத்து விடுதலை செய்துவிடமுடியாது. உளையான சேற்றிலே நாம் விழுந்து கிடக்கிறோம். அந்த சேற்றில் விழுந்தால் எவ்வளவுதான் நாம் முயற்சியெடுத்தாலும் திரும்பவும் அந்த உளையான சேற்றிலே

இன்னும் அமிழ்ந்துதான் போவோம். வெளியிலிருந்து யாராவது கைகொடுத்து தூக்கிவிடாவிட்டால் நாம் அதிலே அமிழ்ந்து மாண்டுதான் போகமுடியும். அதே போலவே பாவிகளாகிய நாம் படுகுழியில் விழுந்து கிடக்கிறோம். நம்முடைய சக்தியினாலும், பலத்தினாலும் எழும்பி வரவேமுடியாது. ஆகவே பரலோகத்தின் ஆண்டவர் தம்முடைய கரத்தை நீட்டி பாவ குழியிலிருந்து நம்மை பிடித்து வெளியே இழுத்து, நம்மை தூக்கி கன்மலையிலே வைத்து இரட்சிப்பின் பாதையிலே நம்மை நடத்துகிறார் என்று வேதம் சொல்லுகிறது.

மகதலேனா மரியாளை பற்றி நாம் படித்திருக்கிறோம், அழகான ஒரு நல்ல குடும்பத்தின் பெண். அவள் தவறி போனாள், அவள் ஒரு வேசியானாள். ஆண்டவர் அவளுடைய பாவத்தை மன்னிக்கவில்லையா? அந்த பெண்ணுக்கு ஆண்டவர் விடுதலை கொடுக்கவில்லையா? அவர் அவளை இரட்சிக்கவில்லையா? உயிர்தெழுந்தபிறகு ஆண்டவர் முதன்முதலாக அந்த மகதலேனா மரியாளைதானே பார்த்தார்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! நம்முடைய ஆண்டவர் சர்வவல்லமையுள்ளவர், எல்லாவற்றையும் படைத்தவர். நம்முடைய வாழ்கையிலே எல்லா கஷ்டங்களையும் போக்குகிறவர், நம்மை தூக்கிவிடுகிறவர். நமக்கு சந்தோஷம் சமாதானம் கொடுக்கிறவர். இந்த உலக வாழ்கைக்கு அப்பாற்பட்டு நித்திய நித்தியமாக நாம் வாழபோகிறதற்கு அந்த பரலோக ராஜியத்திற்கு கொண்டு போகவும், அந்த பரலோக ராஜியத்திற்கு ஏற்றவாரு நம்மை பரிசுத்தப்படுத்தவும், நம்முடைய பாவங்கள் கழுவவும், நம்முடைய பாவத்தின் மேலே வெற்றியை கொடுக்கவும், கால்களை கன்மலை மேலே நிறுத்தி வழுவாதபடிக்கு தேவனுடைய ராஜியத்திற்கு நேராக நாம் நடக்கவும், அவர் வல்லமையுள்ளவர் என்று நம் வேதம் சொல்லுகிறது. அவருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

நியுகினியா என்ற இடத்திலே மனிதர்கள் மனிதர்களை பிடித்து சாப்பிட்டார்கள். அந்த இடங்களுக்கு நான் போய் பார்த்திருக்கிறேன். அந்த மனிதர்களை பார்க்கும்போதே பயங்கரமாக இருந்தது. அப்படிப்பட்ட மக்கள் இந்த ஆண்டவராகிய கிறிஸ்துவுடைய நாமத்தை ஏற்றுக்கொண்டதினிமித்தம் எவ்வளவு நாகரீமாக மாறினார்கள். சாபத்தை வாங்கிகொண்டிருந்த அந்த பெரிய பாவங்களை யாவையும் விட்டுவிட்டு, அந்த வாய்கள் இன்று இயேசுவின் நாமத்தை துதித்து கொண்டிருக்கிறது.



ஐயா வாருங்கள்! எங்கள் வீட்டிற்கு வாருங்கள்! நாங்கள் கொடுக்கும் தேனை சாப்பிடுங்கள், பாலை குடியுங்கள் என்று எத்தனை அன்புள்ள ஜனங்களாக மாறி இருக்கிறார்கள், எத்தனை பக்தியுள்ள மனிதர்களாக மாறியிருக்கிறார்கள்!

பாவ படுகுழியிலே இருக்கிற நம்மை தேவனுடைய ராஜியத்திற்கென்று அழைத்து கொண்டுபோகிற அந்த வல்லமையான தெய்வத்தை நாம் வணங்கவேண்டாமா? ஆராயிரம் வருஷமாக இந்த உலகம் பாவத்திலே தவித்து கொண்டி ருக்கிறது. இந்த இயற்கையெல்லாம் ஆண்டவரை நோக்கி கூக்குரலிடுகிறது! மனிதர்களாகிய நாம் இந்த பாவத்தினாலே எவ்வளவு கேவலமாக போய்விட்டோம்.

ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டபோது எத்தனை அழகுள்ளவர்களாக இருந்தார்கள். அண்டசராசரங்களெல்லாம் அவர்களை கண்டு ஆச்சரியப்பட்டது! ஆராயிர வருஷ பாவங்களினாலே இன்றைக்கு மனிதர்களின் அழுகு பாதிக்குமேல் குறைந்து போய்விட்டது. ஆண்டவருடைய சாயலாகவே நாம் படைக்கப்பட்டோம்! இந்த பாவத்தின் மிகுதியினாலே நம்முடைய அழகெல்லாம் போய்விட்டது. இன்றைக்கு பெண்களது அழகு போய்விட்டதென்று எண்ணி அவர்கள் முகத்தில் வருணத்தை தீட்டி, நகைகளை போட்டுகொண்டு, தங்களை அழகுப்படுத்தி கொள்கிறார்கள். இவை யாவும் பாவத்தின் பலனாக இருக்கிறது. முக அழகு போனாலென்ன? உள்ளத்தில் அழகு இருக்கவேண்டும்!

நாங்கள் சிறு பிள்ளையாக இருந்தபோது, எங்கள் வீட்டிலே ஒரு வேலைக்கார அம்மா இருந்தார்கள். அவர்கள் ரொம்பவும் கருப்பாகவும் அழகற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள்தான் எங்களை வளர்த்தார்கள். நாங்கள் அவர்கள் மடியிலே படுத்துக்கொள்வதும், அவர்களுக்கு முத்தம் கொடுப்பதுமாக இருந்தோம். ஆகவே குழைந்தைகள் இங்கு முக அழகை பார்ப்பதில்லை! அன்பைதான் பார்க்கிறது. தேவனுடைய குணமும் அப்படியே! உள்ளத்தின் அழகுகளை நாம் விசேஷமாக தேடவேண்டும். பரிசுத்தமான அழகு, தெய்வபக்தியுள்ள ஒரு அழகு வேண்டும்.

ஆகவே மிக சீக்கிரத்தில் ஆண்டவர் இந்த உலகத்திற்கு வர போகிறார். அழகற்ற இந்த உலகத்தை முழவதுமாக அழித்து புதிய வானத்தையும் பதிய பூமியையும் உண்டாக்கபோகிறார். நமக்கென்று ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் அந்த பதிய எருசலேம்,

அந்த பரலோக ராஜியம் யாவையும் கண்டுகளிக்கபோகிறோம். அடுத்து ஆண்டவர் ஞானமுள்ள கடவுளாக இருக்கிறார். இந்த பூமியை எவ்வளவு ஞானமாக படைத்தார்! அதிலே ஒன்றும் தப்பிதமாக போனதில்லை. எந்த குறைப்பாடுகளில்லாமல் படைத்து முடித்தார். வெண்டைக்காய் விதையை போட்டால் அது மாமரமாக வருவதில்லை, மாமரம் விதையை போட்டால் அது சுண்டைக்காயாக வருவதில்லை. எந்த விதையை போடுகிறோமோ அதுதான் வரும். அந்தந்த மிருகங்கள் அந்தந்த மிருகங்களை தான் பிறப்பிக்கிறது! இது எவ்வளவு பெரிய ஞானம்! அப்படியில்லாவிட்டால் மனிதனின் வாழ்கையில் என்ன ஒரு நம்பிக்கை ஏற்படும். ஒரு விதையை போட்டுவிட்டு அதனால் என்ன செடி வர போகிறதோ? என்று விழிக்கவேண்டியதுதான். ஆண்டவர் எல்லவற்றையும் ஞானத்தோடு படைத்திருக்கிறார்.

ஒரு மனிதன் ஒரு ஆலமரத்தடியிலே கலைப்பாக வந்து படுத்தான். அவன் படுக்கும்போது அந்த ஆலமரத்தை உற்று பார்த்து யோசித்து : என்ன முட்டாள் கடவுள், இவ்வளவு பெரிய பிரமாண்டமான மரத்திற்கு இவ்வளவு சிறிய காயை அதற்கு வைத்திருக்கிறாரே! ஏன் பூசனிக்காய் போல காயிருக்கக்கூடாதா? என்ன கடவுள், இவருக்கு என்ன ஞானம் இருக்கிறது? என்று சிந்தித்தான். பிறகு அவன் உறங்கிய பின் சிறிது நேரத்தில் அந்த ஆலங்காய் அவன் நெற்றியிலே பட்டென்று வந்து விழந்தது. அவன் திடுக்கிட்டு விழித்துப்பார்த்தபோது ஒரு ஆலங்காய் அவன் மீது விழுந்ததை அறிந்தான். அவன் நினைத்த மாதிரி பூசனிக்காய் போல காய் இருந்து அவன் நெற்றியிலே வந்து விழுந்திருந்தால் அவன் மண்டை அன்றே சட்டினியாகி இருக்கும். அப்பொழுது தான் அவன் ஆண்டவருடைய ஞானம் எப்படிப்பட்டது என்று அவனுக்கு விளங்கினது.

இயற்கைகள் அவருடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறது. ஆண்டவர் யானைக்கு இறக்கைகளை கொடுத்திருந்தால், அந்த யானைகளும் அழகாக பறந்து வந்து குடிசை வீடுகள் மேலே வந்து உட்கார்ந்தால் என்ன ஆவது? கர்த்தர் யாவற்றையும் ஞானமாக படைத்தார். அந்த ஞானத்தை நாம் எப்படி விவரிப்பது? அப்படியே கர்த்தர் நமக்கு ஆவிகுரிய ஞானத்தையும் கொடுத்திருக்கிறார்.

**“கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் ” ~சங்கீதம் 111:10**

ஆண்டவருடைய ஞானத்தை நாம் பெற்று கொள்ளவேண்டு மென்றால்,



நாம் அவருக்கு பயப்படவேண்டும். அவருடைய சத்தத்தை நாம் கேட்கவேண்டும். அவருக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவருடைய பிள்ளைகளாக நாம் இருக்கவேண்டும். உலகத்திலேயே பெரும் ஞானி என்று பெயர் பெற்றவர் அந்த சாலமோன் ஞானிதான். அவருக்கு அந்த ஞானம் எப்படி வந்தது? திருமறையிலே ஆண்டவர் சாலமோனுக்கு ஏராளமான ஞானத்தை கொடுத்தார் என்று வேதம் சொல்லுகிறது.

பிள்ளைகளுக்கு ஞானம் வேண்டுமா? வேத வசனங்களை கற்றுகொடுங்கள், எண்ணிறைந்த ஆசீர்வாதங்களை கர்த்தர் அவர்களுக்கு கொடுத்து ஞானத்தையும் தருவார். இன்றைக்கு உலகத்திலே 84 பெரிய அறிஞர்கள் இருக்கிறார்கள் என்று கின்னஸ் புத்தகத்திலே கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த 84 அறிஞர்களிலே கணக்கு பார்த்தால் 74 அறிஞர்கள் நமது வேதத்தை படித்த மாணவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய வேதம் ஞானமுள்ளவர்களாக மாற்றுகிறது. அதனால்தான் இந்த வேதத்தை படிக்காதபடி சாத்தான் பல தடைகளை கொண்டு வருகிறான். அந்த ஞானத்திலே விசேஷமான ஒரு ஞானம் இரட்சிப்பின் ஞானம் என்று வேதம் சொல்லுகிறது.

எப்படி நாம் இரட்சிக்கப்படவேண்டும்? இந்த உலகத்திலே நாம் எப்படி வாழ்வது என்பது நமக்கு பிரச்சனையில்லை. வேதம் சொல்லுகிறது, காகங்களை கவனித்து பாருங்கள், மிருகங்களை கவனித்துப் பாருங்கள், நாம் விதைக்கிறோம் அறுக்கிறோம் களஞ்சியத்திலே சேர்த்து வைக்கிறோம். ஆனால் அந்த பறவைகள் விதைக்கிறதில்லை, அந்த மிருகங்கள் அறுக்கிறதில்லை, அவைகள் வாழவில்லையா? ஆகவே இந்த உலகத்தில் நாம் வாழவேண்டுவது பிரச்சனையில்லை. எப்படி இந்த உலகத்தை விட்டு ஆண்டவரிடத்தில் போவது என்று தான் பிரச்சனை. அப்படியானால் தேவனுடைய ராஜியத்திற்கு போகிறதற்கு அந்த பரிசுத்த ஞானமும், அந்த இரட்சிப்பின் ஞானமும் நமக்கு ஆண்டவர் விசேஷமாக தருகிறார். உலக விஞ்ஞானிகள், அறிவாளிகள், மண்ணுகுள்ளாக போய்விட்டால் நமக்கு என்ன பிரயோஜனமாக இருக்கிறது? தேவ ஞானம் பெற்ற ஞானிகள் மண்ணுக்குள்ளே போனாலும் எழுந்து அவரோடே போவார்கள்! அவர்கள் தேவனுடைய சாயலை பெற்றுகொண்டு தேவனுடைய ராஜியத்திற்கு போவார்கள். அப்படிப்பட்ட ஞானத்தை தேவன் நமது வேதபுத்தகத்திலே வைத்திருக்கிறார்.

**"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்க்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." ~ யாக்கோபு 1: 5**

தேவனிடத்தில் கேட்போம், அவரை பிராத்திப்போம், வேதத்தை படிப்போம், பரிபூரண ஞானத்தை ஆண்டவர் நமக்கு கொடுப்பார். மடையனே! உனக்கு என்ன சொன்னாலும் விளங்கவே விளங்காது என்று அவர் நம்மை திட்டமாட்டார். நம்மை கடிந்து கொள்ளாதபடி நமக்கு ஏராளமான ஞானத்தை கொடுப்பார். அந்த இரட்சிப்பின் ஞானம் நமக்கு அவசியமாக தேவைப்படுகிறது. ஆண்டவர் சட்டதிட்டமுள்ளவர். இந்த உலகத்திலே எதை பார்த்தாலும் அநேகவிதமான சட்டதிட்டங்கள் நம்மை கட்டுப்படுத்துகிறது. இந்த சட்டம் இல்லாவிட்டால் இந்த உலகம் இயங்காது. இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்: இந்த ஆகாயமண்டலத்திற்கு அநேக உலகங்களுக்கு ராக்கெட்டுகளை அனுப்பும்போது, இந்த உலகத்தை கட்டுப்படுத்துகிற சட்டத் திட்டங்கள் அண்டசராசரங்களையும் கட்டுப்படுத்துகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டம் உலகங்களை மாத்திரமல்ல மனிதனையும் இயக்குகிறது.

ஆண்டவர் இந்த உலகத்தின் மக்களுக்காக சீனாய் மலையின் மீது வந்து பத்து கற்பனைகளை எழுதிக்கொடுத்தார். நம்முடைய வாழ்வை கட்டுப்படுத்துவதற்காக அவர் தாமே அங்கே அவருடைய கரத்தினாலேயே எழுதிக்கொடுத்தார். இந்த வேத புத்தகம் முழவதும் பரிசுத்த தேவ மனிதர்களால் எழதப்பட்டது. ஆனால் இந்த பத்துக்கற்பனைகளை மட்டும் தனது சொந்த விரலினாலே எழுதிக்கொடுத்தார். ஆகவே மனிதர்கள் அந்த சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்கும்போது, இரட்சிப்பை பெற்று கொள்கிறோம் என்று ஆண்டவர் விசேஷமாக சொல்லுகிறார். ஒரு படித்த பணக்கார வாலிபன் ஆண்டவரிடத்தில் வந்து

**"அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்."
~ மத்தேயு 19:16**

அப்படியானால் ஜீவனில் நீ பிரவேசிக்க விரும்பினால், அந்த பத்து கற்பனைகளை கைகொள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இந்த வேத புத்தகத்தை முடிக்கும்போது அந்த முடிவு நேரத்திலே ஆண்டவர் எழுதுவதை கவனியுங்கள்.

**"ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" ~வெளி 22:14**



நம்மை கட்டுப்பத்துவது அந்த பத்து கற்பனைகள் என்று வேதம் நமக்கு தெளிவாய் சொல்லுகிறது. சாலமோன் ஞானி இதை குறித்து சொல்லுகிறதாவது

**"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள் எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்."
-பிரசங்கி 12:13,14**

அப்படியானால் எல்லா மனிதர்களிடத்திலேயும் கடவுள் எதிர்ப்பார்ப்பது, தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளை கைகொள்ளுங்கள் என்பதே. ஆண்டவர் பரிசுத்தமுள்ள ஒரு தெய்வம். இன்றைக்கு மார்க்கங்கள் ஏராளமாக இருக்கிறது. ஆனால் மார்க்கங்களிலே ஆண்டவரின் மார்க்கம் எதுவென்றால், எந்த மார்க்கத்தில் பரிசுத்தம் காணப்படுகின்றதோ அது கடவுளுடைய மார்க்கம். ஏனென்றால் கடவுள் அசுத்தத்தை பார்க்கமாட்டாத ஒரு கடவுள். அவரை தொழுதுகொள்கிற பிள்ளைகளிடத்திலே பாவம் இருக்ககூடாது. பரிசுத்தமில்லாமல் யாரும் தேவனை பார்க்கமுடியாது என்று எபிரேயர் 12:14–ல் வாசிக்கிறோம். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. ஆகவே தேவதூதர்களும் ஆண்டவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக என்ன சொல்லுகிறார்கள்?

**" சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள் அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து " ~ ஏசாயா 6.2**

அப்படியானால் அந்த பரலோகத்திலே பரிசுத்தம்தான் விசேஷமாக இருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம். நம்முடைய கடவுள் பரிசுத்தமுள்ளவர், நம்மை பற்றி ஆண்டவர் பேசுகிறது என்ன? அவர் எதிர்ப்பார்க்கிறது என்ன? அந்த பரிசுத்தத்தையே எதிர்ப்பார்க்கிறார்.

**"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்." ~1 பேதுரு 1.15**

எந்தவிதமான அசுத்தமும் இருக்ககூடாது. மனதிலும், உள்ளத்திலும், தப்பித எண்ணங்களும், தப்பிதமான காரியங்களும் இருக்ககூடாது. ஆண்டவர் அந்த பரிசுத்ததை நேசிக்கிறார். பரிசுத்தமான, பிள்ளைகளை விசேஷமாக ஆசீர்வதிக்கிறார். நாம் அவருக்கு ஒப்பகொடுத்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்வோமென்றால் அவர் நமக்கு கொடுக்கும் விசேஷமான வாக்குத்தத்தம்,

**“பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைக் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.” ~1 யோவான் 3.2**

தேவனுடைய பிள்ளைகள் அவரை போலவே அவர் வரும்போது பரிசுத்தமாக இருப்பார்கள். அப்படியிருந்தால்தான் நாம் அவரை பார்க்கமுடியும். ஆண்டவர் அன்புள்ள தெய்வமாக இருக்கிறார்.

**“பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது, அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்.” ~1 யோவான் 4:7,8**

ஆண்டவர் அன்புள்ள தெய்வமாக இருக்கிறார். இன்றைக்கு உலகத்திலே அன்பு என்று எதை எதையோ சொல்லி கொண்டிருக் கிறோம். ஒரு பெண் ஒரு ஆணை நேசிப்பது அன்பு என்று நினைக்கிறோம். நம் தேசத்தை நேசிப்பது அன்பு என்று நினைக்கிறோம். அன்பு என்பது காதலுக்கும் மேற்பட்டது, தேசபக்திக்கும் மேற்பட்டது. தாய் தந்தையை நேசிப்பதிலும் மேற்பட்டது என்று வேதம் சொல்லுகிறது. ஆண்டவர் அன்பாக இருக்கிறார். அந்த அன்பினாலே நம்மை விசேஷமாக நேசிக்கிறார்.

மாவீரன் நெப்போலியனை பற்றி நான் ஒரு கதை படித்தேன். அந்த நெப்போலியன் இந்த ஐரோப்பா முழுவதையும் ஜெயித்தான், எப்படி அவன் அவ்வளவு பெரிய வீரனாக முடிந்தது? அந்த மாவீரனுக்கிருந்த ஒவ்வொரு சிப்பாயும் அவனுக்காக தங்களது உயிரை கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள். எதனாலே? அவனது படைகளிலே இருக்கிற ஒவ்வொரு சிப்பாய்களையும் அறிவான், அவர்களை அவன் நேசித்தான். ஒரு சமயத்திலே இரவில் சிப்பாய்கள் தூங்கிகொண்டிருந்த நேரத்திலே, அந்த நெப்போலியன் அந்த சிப்பாய்களை நோட்டமிடுவதற்கு புறப்பட்டு சென்றான். அது அவனுடைய வழக்கம். தன்னிடத்தில் வேலை செய்கிற சிப்பாய்கள் நன்றாக சந்தோஷமாக சமாதானமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கிருந்தது. அப்படி போகும்போது ஒரு கூடாரத்திலே விளக்கு எறிந்து கொண்டிருந்தது. என்னவென்று அவன் எட்டிப் பார்கையிலே, அங்கு ஒரு சிப்பாய் அந்த விளக்குக்கு முன்பாக தூங்கிகொண்டிருந்தான், அவனது கையில் ஒரு பேனா இருந்தது. அவன் உள்ளே போய் பார்த்தபோது ஒரு பேப்பரிலே சிப்பாய் எழுதி இருக்கிறதை படித்து பார்த்தான். அந்த சிப்பாயின் கண்ணீர் துளிகள் அந்த பேப்பரிலே விழுந்து கிடந்தது. தன்னுடைய மனைவி பிள்ளைகளை நினைத்து அழுதிருக்கிறான்.



தனக்கு கடன்கள் அதிகமாக இருப்பதாகவும், எப்படி அடைப்பேன்? என்றும் எழுதியிருந்தான். இந்த கடனை எனக்காக யார் அடைப்பது? என்று ஒரு கேள்விக்குறி போட்டிருந்தான். அந்த நெப்போலியன் அந்த பேனாவை எடுத்து அந்த கேள்விக்குறி பக்கத்திலே நெப்போலியன் என்று எழுதினான். அதனால்தான் அந்த சிப்பாய்கள் அவனுக்காக உயிரையே கொடுத்தார்கள்.

அந்த மாவீரனைவிட நமது ஆண்டவர் விசேஷமானவர். அந்த இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வந்தார். நாம் அழிந்து போகக்கூடாது என்றும் பாவத்தில் மடிந்து போகக்கூடாது என்றும் நமக்காக அந்த கல்வாரி மலைக்கு சென்றார், நமக்காக மரித்தார். நாம் நித்திய ஜீவனையடைவதற்காக தன் உயிரை விட்டார். நாம் தேவ குமாரர்களாவதற்கு அவர் மனுஷகுமாரனாக ஆனார். நாம் பரலோகம் போகவேண்டும் என்று சொல்லி இந்த வனாந்திரமான உலகத்திற்கு வந்தார். எத்தனை அன்பு! நம்முடைய பாவக்கடன் இருக்கிறதே, எழுதினாலும் புத்தகம் கொள்ளாது. அந்த பாவ கடன் மீது தனது இரக்கத்தினாலே இயேசு என்று எழுதினார். நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்பதற்காகவே நம்மை அவ்வளவாக நேசித்தார். தன்னுடைய ஜீவனை கொடுத்தே நம்முடைய ஜீவனை மீட்கத்தக்கதாக கல்வாரி சிலுவையில் மாண்டார். அப்படிப்பட்ட இறைவனை நாம் வணங்கவேண்டாமா? துதிக்கவேண்டாமா? வாழ்நாள் முழுவதும் தெய்வமே என்று தொழுதுக் கொள்ளவேண்டாமா?

இதை படிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பெருக்கமாக வருவதாக. ஆமென்.